Sectt. II-48—23,368—9-2-20.

# Home (1920) Department.

(Miscellaneous)

Ordinary SERIES.

G.O. No. 1281

DATED 7-8-1920

[Despatch Abstract.]

Bharatamata.

Subscription for the journal by Government--refused.

# BACK PAPERS.

| G.O. | No. | Department. | Date. | G.O. | No. | Department. | Date. |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |

# FURTHER PAPERS.

| G.O. | No. | Department. | Date. | G.O. | No. | Department. | Date. |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |

---

395/17 Slip book for H RK 30.7.20

Dis 3673/28.7.20

1

A. R. Rajagopala Iyengar,
EDITOR AND MANAGER.

THE "BHARATAMATA" OFFICE,
449, East chitra Street ~~719, NORTH ADAVALANJAN STREET~~,
SRIRANGAM.

B. M.P. No. 52920

Dated 26. 7. 1920

HOME DEPARTMENT 27 JUL 1920 GOVT. OF MADRAS

From,
The Editor,
"The Bharatamata",
Srirangam.

To, The Judicial Secretary,
Home Department, Ootacamund.

Sir,

We have the pleasure to send you herewith the first issue of our "Bharatamata", mainly intended to educate the masses in their social and religious questions.

The collector here has favoured us, by asking us to publish the journal without any security. Sir. P. S. Sivaswami Iyer avl. has helped us by giving us an article on the usefulness of a Tamil organ and of the responsibility a citizen, in matters concerning him and affecting his interests. We may also request you to kindly lend us your support personally, by redressing such of the grievences that are found in the journal and pecuniarily by subscribing to some copies of our journal.

Hoping to be favoured with a reply.

We have the honor to be,
Sir,
Your most obedient Servant,
A. R. Rajagopalan.
Editor.

[Margin: No reed in Home ... ]

RAM

# THE BHARATAMATA.

# பாரத மாதா.

ஸ்ரீரங்கத்தில் மாதந்தோறும் வெளிவரும்
சிறந்த தமிழ் பத்திரிகை.

வருஷச்சந்தா.

உள் நாடு ரூ. 3. வெளி நாடு ரூ. 4.

*ஆறுமாதத்திற்கு குறைந்த சந்தா அங்கீகரிக்கப்படமாட்டா.*

மலர் 1.] 1920௵ ஜூலை௴-ரௌத்ரி௵ ஆடி௴ [இதழ் 1.

## உள்ளடக்கம்.

1. கடவுள் வணக்கம்.
2. நம்முடைய கடமை—ஸ்ரீமான் K. S. ராமஸ்வாமி சாஸ்திரிகள், B.A., B.L.
3. ஸ்ரீமுகம்—ஸர். P. S. சிவஸ்வாமி ஐய்யர் அவர்கள், K.C.S.I., C.I.E.
4. ஒட்டர்களின் பொறுப்பும், கடமையும்—ஸ்ரீமான் V. ரெங்கஸ்வாமி தாதாசாரியார்.
5. தூஷணையால் வரும் துயர்—கற்பகம்.
6. தேசீயக்கல்வி—ஸ்ரீமான் C. சுப்பிரமணிய பாரதி (சுதேசமித்திரன்).
7. வெளியூர் செய்திகள்—தர்மபுரி.
8. திருச்சி, தஞ்சை ஜில்லாக்களின் சட்ட ஸபை அபேக்ஷகர்கள்.
9. ஸ்ரீரங்கம் செய்திகள்.
10. நமது பத்திரிகை.
11. குறிப்புகள்.

*All-rights Reserved.*

PRICE PER COPY As. 5.

## "பாரதமாதா" அபிமானிகள்.

1. ஸ்ரீமான் கே. ஸி. ஸப்தரிஷி ரெட்டியார் அவர்கள்,
   ஜமீந்தார், காட்டுப்புத்தூர்.
2. ,, கே. ஸி. முத்துவெங்கடாசல ரெட்டியார் அவர்கள்,
   ஜமீந்தார், மீனம்பள்ளி.
3. ,, பி. ஜி. சுந்தரம் ஐய்யர் அவர்கள், பி.ஏ. எல்.டி.
   தலைமை உபாத்தியாயர் ஹைஸ்கூல், காட்டுப்புத்தூர்.
4. ,, கே. என். ரகுநாதஸ்வாமி ஐய்யர் அவர்கள்,
   மிராசுதார், குழுமணி.
5. ,, ஒரு அபிமானி, மிராசுதார், அந்தநல்லூர்.
6. ,, வி. ரெங்கஸ்வாமி தாதாசாரியார் அவர்கள்,
   மிராசுதார், ராஜேந்திரம்.
7. ,, ஆர். ஐய்யாவய்யர் அவர்கள்,
   மிராசுதார், திருச்சந்துறை.
8. ,, கே. எஸ். சுப்பிரமணிய ஐய்யர்,
   மிராசுதார், கருப்பத்தூர்.

---

## விஷயதானம் செய்பவர்களுக்கு விஞ்ஞாபனம்.

1. "பாரதமாதாவின்" கொள்கைகளை அனுஸரித்து தெளிவான சுத்த தமிழ் நடையில் காகிதத்தின் ஒரே பக்கத்தில் இங்கியால் எழுதி அனுப்பவேண்டும்.
2. நிருபநேயர்களின் அபிப்பிராயங்கள் பத்திரிகையை சிறுதும் கட்டுப்படுத்தாது.
3. அரசாங்க ஆட்சி முறையைப்பற்றி தூஷணையான வியாஸங்களுக்கு "பாரதமாதா" இடம் தாராது.

பத்திராதிபர்.

# பாரத மாதா.

மலர் 1.] 1920௵ ஜூலை௴—ரௌத்ரி௵ ஆடி௴ [இதழ் 1.

### கடவுள் வணக்கம்.

அணி பொழில் திருவரங்கத்தம்மானை,
ஆயர்குலத்தினில் தோன்றும் மணிவிளக்கை,
இந்திரன் சிறுவன் தேர்முன் நின்றானை,
ஈரிரண்டு மால்வரைத்தோளம்மான்றன்னை,
உள்ளுவாருள்ளத்தே யுறைகின்றானை,
ஊணாகப்பேய்முலை நஞ்சுண்டான்றன்னை,
என்னுடைய வின்னமுதை யெவ்வுள்பெருமலையை,
ஏரார்ந்தகண்ணி யசோதையிளஞ் சிங்கத்தை,
ஐவாயரவணை மேலுறையமலனை,
ஒளியாவெண்ணெயுண்டானை,
ஓங்கியுலகளந்த வுத்தமனை,
"ஔவியபிறப்பி லழுந்திவாடாமல்"
கருதியுரைப்பவர் கண்ணன் கழலிணைக் காண்பீர்களே.

—திருவாய்மொழி.

---

அரங்கமாளிகை கருங்கடல்வண்ணனை,
ஆலிமாமுகிலை வாலிகாலனை,
இந்தளூருறையெந்தை பெம்மானை,
ஈசனான்முகன் வாசவன்றலைவனை,
உள்ளுவாருள்ளத் துள்ளுறைசோதியை,
ஊரகத்துனின்ற ருணீரகத்தடிகளை,
எவ்வுண்மாயனைத் தெய்வநாயகனை,
ஏர்மலிசிகரத்து நீர்மலையாதியை,
ஐவாயரவிலறிதுயிலமலனை,
ஒருகான்மொழியினும் மொழிகுவைநெஞ்சே,
ஓதநீர்ஞாலத் துழலும்,
ஔவியபிறப்பி லழுந்திவாடுவதே!

—பிள்ளைப்பெருமாளையங்கார்.

---

உயர்வற வுயர்நலமுடையவனவன்
மயர்வற மதிநலமருளினன் யவனவன்
அயர்வறுமமரர்க ளதிபதியவனவன்
துயரறுசுடரடி தொழுதெழன் மனனே!

என் மனமே!

எவ்வுலகங்களிலுமுள்ள இன்பங்களுக்கெல்லாம் மேம்பட்டதும், நிகரற்றதும், முடிவற்றதுமான பேரின்பத்தையுடையவனும், தன்னடிபணிந்தோர்க்கு இவ்வுலகின்கணுள்ள அஞ்ஞான விருண் மயக்கத்தை நீக்கி மெய்ஞானத்தை அளிப்பவனும், பிணி, பசி, மூப்பு, பிறப்பு, இறப்பு, அற்ற தேவர்களுக்கதிபதியுமான முழுமுதற் கடவுளின், துன்பம் நீக்கும் ஜோதிமயமான திருவடிமலர்களைத்தொழுது உய்குவாய்.

—நம்மாழ்வார், திருவாய்மொழி.

---



## நம்முடைய கடமை.

இப்பொழுது அழகும் பெருமையும்வாய்ந்த நம்முடைய தேசத்தில் பிறப்பென்ற பெரும்பேறை அடைந்த மக்களெல்லாம் தங்களுடைய கடமைகள் என்ன, அவைகளை எப்படி நன்றாகச் செய்யலாம், என்று விசாரிக்க முயற்சி செய்வதற்கு முன் அந்த தேசத்தின் அதிஷ்டான தேவதையான பாரத மாதாவின் பெருமையை அறிந்துகொள்ளவேண்டும். இமயமலையையே கிரீடமாகக்கொண்டு, சமுத்தராஜனால் சமர்ப்பிக்கப்பட்ட பாத்தியத்தை அங்கீகரித்த சரணாரவிந்தங்களுடன் விளங்கி, தன் இருகைகளாலும் அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு



புருஷார்த்தங்களையும் அளவில்லாமல் அளிக்கும் நம்முடைய தாயார் ஸந்நிதியில் நாம் உடல், பொருள், ஆவி எல்லாம் ஸமர்ப்பணம் செய்யவேண்டும் என்று சொல்லவும் வேண்டுமோ! நம்முடைய குறைகளை நன்கறிந்து நமக்கு நல்ல வழிகாட்டிய மகரிஷிகளுக்கும் இந்த தேசத்திலும் தர்மத்திலும் உள்ள அன்பினாலே அடிக்கடி திருவவதாரம் செய்து தர்மத்தை நிலை நிறுத்தின பரமேஸ்வரனையும் வணங்கி நம்முடைய கடமைகளை விசாரித்தோமேயானால் அவைகள் நமக்கு எளிதில் நன்றாகப் புலப்படும். தேச பக்தி பெருகி, அந்த அமிர்தப் பெருக்கினாலே நம்முடைய உள்ளம் பரிசுத்தமானால் அந்த க்ஷேத்திரத்தில் விதைக்கப்பட்ட தர்மம் என்ற விதைய[illegible]து அமோகமான பலத்தை கொடுக்கும். இப்பூவுலகில் நம்முடைய தேசத்தில் ஏற்பட்ட பெருமைகளையும், விமர்சைகளையும், வழக்கங்களையும் கைவிடாமல் நாம் நவீன இன்பங்களையும் வித்யைகளையும் கைக்கொள்ள வேணுமே ஒழிய அவைகளுக்குக் கேடுண்டாகும்படியாக இவைகளைத் தேடக் கூடாது. துரைத்தன சீர் திருத்தங்களும் கைத்தொழில் வியாபாரப் பெருமைகளும் ஒற்றுமையின் சந்தோஷமும் தேடவேண்டியது அவசியமே. ஆனாலும் நம்முடைய சாஸ்த்ர சம்ப்ரதாயங்களுக்கு விரோதமில்லாமல் தேடவேண்டும். அப்படி இவ்விரண்டுவிதமான சாம்ராஜ்யங்களைத் தேடினேமேயானால் பராசக்தி அனுக்ரஹத்தால் நாம் முன் போலவே இகபரஸுகங்களை பரிபூர்ணமாகப் பெறுவோம் என்பது ஸத்யம்.

கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரி.

---

### ஸர். பி. எஸ். சிவஸ்வாமி அய்யர் கே. ஸி. எஸ். ஐ., ஸி. ஐ. யி. அவர்களின் ஸ்ரீமுகம்.

ஒவ்வொரு ஜில்லாவிலும் தமிழ் பத்திரிகைகள் இருக்கவேண்டியது எப்பொழுதும் அவசியம். இப்பொழுது அனுஷ்டானத்திற்கு வரப்போகிற ராஜாங்க சீர்திருத்தங்களினாலும் டிஸ்ட்ரிக்ட் போர்டு, தாலுகா போர்டு, கிராம பஞ்சாயத்து, முனிசிபாலிட்டி

என்கிற பௌரஜானபத அதிகார ஸங்கங்களுக்கு அதிகமான ஸ்வதந்தரங்கள் கொடுக்கப் போகிறபடியாலும் பிரதிநிதிகளை நியமிக்கிற பாத்தியதை ஜனங்களுக்கு ஜாஸ்தியாய் கொடுக்கப்போகிறபடியாலும் தங்களுக்கு கிடைத்திருக்கிற அதிகாரம், ஸ்வதந்தரம், இவைகளை சரிவரசெலுத்தும்படி ஜனங்களை போதிக்கவேண்டியது விசேஷமாய் நம்முடைய பொறுப்பாயிருக்கிறது. இந்த பொறுப்பை நிர்வகிக்கிறதற்கு தகுந்த சமாசாரப் பத்திரிகைகளும் மாதாந்தரப் பத்திரிகைகளும் முக்கியமான ஸாதனங்கள். ஆனால் இவைகளை நடத்துகிறவிஷயத்தில் யதார்த்தத்தையறிந்து தெரிவிப்பதும் கட்சி அபிமானம் இல்லாமலும் இதாவகுப்புகளை சேர்ந்தவர்கள்பேரில் த்வேஷமில்லாமலும் நியாயத்தையும் ஸமதிருஷ்டியையும் பாராட்டி இன்னது ஸாத்தியம் அல்லது அஸாத்தியம் என்கிற விவேகத்துடன் நடத்தவேண்டியது ரொம்பவும் அவசியம். அநேகமாய் இப்பொழுது ஏற்பட்டிருக்கிற பத்திரிகைகள் இந்தியா ராஜாங்கத்தைப் பற்றியும் நம்முடைய ராஜதானி துரைத்தனத்தைப் பற்றியும் ஜாஸ்தியாக கவனிக்கிறார்களே ஒழிய, அந்தந்த ஜில்லாக்கள் ஸம்பந்தமான விஷயங்களை அவ்வளவு கவனிக்கிறது இல்லை. ஜில்லாக்கள் விஷயமான குறைவுகளைப்பற்றியும் அவைகளை நீக்குவதற்கு ஜனங்களோ அல்லது அதிகாரிகளோ என்ன முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டியது என்பதைப்பற்றியும் நம்முடைய தேசம் வித்தியை, விவசாயம், கைத்தொழில்கள், வியாபாரம், ஆரோக்கியம், ஒற்றுமை முதலிய எல்லா விஷயங்களிலும் எப்படி அபிவிருத்திக்கு வருமோ அதற்கு வேண்டிய உபாயங்களையும் நன்றாய் யோஜித்து ஜனங்களுக்கு போதிக்கவேண்டியது பத்திரிகைகளின் கடமையாக இருக்கிறது. மேற்கண்ட கொள்கைகளுடன் பத்திரிகைகள் நடத்தப்படும் பக்ஷத்தில் நம்முடைய தேசத்திற்கு பெரிய உபகாரமாக இருக்கும் என்பதில் சந்தேக மில்லை.

---

## ஓட்டர்களின் பொறுப்பும் கடமையும்.

புதிய சீர்திருத்த சட்டபிரகாரம் ஓட்டர்களின் புதிய ஜாப்தாபடி ஒவ்வொரு ஜில்லாவிற்கும் சுமார் முப்பதினாயிரம் நபர்கள் ஏற்படுமென்று தோன்றுகிறது.



திருச்சினாப்பள்ளி ஜில்லாவிற்கு மாகாண சட்ட ஸபைக்காக மூன்று அங்கத்தினர்களும், இம்பீரியல் (உயர்தர) சட்டஸபைக்காக திருச்சி, தஞ்சை பகுதிக்காக ஒருவரும் தேர்ந்தெடுத்தல்வேண்டும்.

சென்ற அநேக வருஷங்களாக பாரத ஜனஸபைபோன்ற மகா ஸபைகளின் கிளர்ச்சியின்பயனாக கிடைத்திருக்கிற இந்த உரிமையை ஓட்டர்கள் தேச நன்மையையும், முன்னேற்றத்தையும் கோறி சரியாக பயன்படுத்திக் கொள்ளல்வேண்டும். இது ஒரு ஸத்தியமான கடமையாகும். இப்பொழுது ஒவ்வொரு ஓட்டரும் பாரத மாதாவிற்கு செய்யவேண்டிய பெரும் ஊழியம் என்னவெனில் பொது ஜனங்களுடைய குறைகளை தெளிவாயும் வியக்தமாயும் ஸகோபசாங்கமாயும் அதிகாரவர்க்கத்தவர்களுக்கு எடுத்துரைத்தும் போராடியும் சீர் திருத்தம் செய்யக்கூடியவர்கள் யாரோ, அவர்களையே பொறுக்கி யெடுத்தல் விசேஷமான காரியம். நம்முடைய தேசம் முன்னேற்றமடைய வேண்டுமானால், அதின் பொறுப்பு ஓட்டர்களிடத்தில்தான் இருக்கிறது. எப்படி ஒரு பெரிய கட்டடத்திற்கு அஸ்திவாரம் இன்றியமையாததோ, ஒரு பெரிய ஆலவிருக்ஷத்திற்கு வேர்தான் பிரதானமோ, அம்மாதிரியாகவே தேசமுன்னேற்றத்திற்கு ஓட்டர்களே ஜவாப்தாரியாகின்றனர். சட்ட ஸபைக்கு அங்கத்தினர்களாக அமர விரும்பும் அபேக்ஷகர்கள் அநேகமாயிருக்கின்றபடியால் அநேகவிதமான தொந்திரவுகள் வரினும், அவரவர்களின் யோக்கியதையையும், பொறுப்பையும், ஊழியத்தையும் நன்கு கவனித்தல்வேண்டும். எவருக்கும் வாக்குறுதி செய்யாமல் கடைசிவரையிலும் எவரெவர்கள் அபேக்ஷகர்களாய் வருகின்றனர் என்று நிதானமாய்க் கவனித்து தங்களுடைய சுதந்தரத்தை துர்விநியோகப் படுத்தாமல் பாத்திரமறிந்து செவ்வனே தேர்ந்தெடுத்தல் வேண்டும். எப்படி தர்மசொத்தை துர்விநியோகப் படுத்தல் கூடாதோ அதேமாதிரியாக இவ்வுரிமையையும் துர்விநியோகித்தல் கூடாது. ஒவ்வொரு தனிநபரும் தம்முடைய ஒரு ஓட்டினால் என்ன நன்மை விளையப்போகிறது என்று கருதவே கூடாது. அதினால் உண்டாகும் பலாபலனை யோசிக்குமளவில் தேசத்திற்கு தகுதியுள்ளவர்கள் தேர்ந்து

எடுக்கப்பட்டால் க்ஷேமமும், தகுதியற்றவர்களால் கஷ்டமுமுண்டாகும் என்பது வெளிப்படை. இந்த ஓட்டு உரிமை நன்கு பரிபாலிக்கப்படாவிட்டால் அவர்கள் தேசத்துரோகம் செய்ததாகவே கருதப்படுவார்கள். பற்பல ஜனங்களுடன் ஸமரஸப்பான்மை வகித்து, கலந்து, யோசித்து, மகாநாடுகள் கூட்டி யார் யார் எவ்வெத் துறைகளில் உழைப்பார்களென உறுதி மொழி வாங்கிக்கொண்டும் ஒருவிதமான சரியானமுடிவிற்கு வரவேண்டியதுதான் முற்றிலும் அவசியம்.

இந்தியர்களுக்கு தேசாபிமானமும், ராஜபக்தியும், குருபக்தியும், தெய்வபக்தியும் மதக்கொள்கையைச் சார்ந்தே இருக்கின்றன. இந்த ஓட் பாத்தியத்தையும் மதக்கொள்கையாக ஸத்தியம[illegible] கொள்ளல் வேண்டும்.

எந்த ஜாதியாயிருந்தபோதிலும் ஸரி, பாரதமாதாவின் குறைகள் எல்லோருடைய குறைகளே. நமது தாய் நாடாகிய இந்தியாவோ, அரசியல், கைத் தொழில், கல்வி, சுகாதாரம், விவசாயம் முதலிய அரிய பெரிய துறைகளில் வெகு தூரம் முன்னுக்கு வரவேண்டியிருக்கிறதினால், இந்த ஓட் பாத்தியத்தை அடிப்படையாக வைத்துக்கொண்டு எல்லாருடைய குறைகளையும் உண்மையாகவே, ஸத்தியமாகவே யார் யார் தம்முடையதென்று கருதி உழைக்க ஸாத்தியமானவர்களோ அவர்களையே தேர்ந்தெடுத்தல் நமது பாரதமாதாவிற்கும், ஜன்ம பூமிக்கும், நமக்கும், நமது பெரியோர்களுக்கும் செய்கிற மறக்காத சிறந்த ஊழியமாகும்.

வி. ரேங்கஸ்வாமி தாதாசாரியார்.

---

## தூஷணையால் வரும் துயர்.

பூவுலகில் கிடைத்தற்கரிய மானிடதேகத்தைப் பெற்று அதனாலடைய வேண்டிய மக்கட்பேற்றை யடையாமல், தங்கட்குரிய செல்வம், சிறப்பு, கௌரவம், மதிப்பு, தொழில், உத்தியோ



கம், பக்கபலம் முதலிய வேறுவகை சௌகர்யங்களைக்கொண்டும், தற்கால சகவாச பலனாகவும், நன்மை துன்மைகளின்னதென்றுணராது மனம் போனவாறே சங்கதோஷத்திலீடுபட்டு லௌகீக வியவகாரங்களில் அதிகமாய் அபேட்சைவைத்து கண்டதேகாக்ஷி கொண்டதே கோலமாக தற்கால சுகத்தை நாடி பிறரை பொருட்படுத்தாது தானே அரசன் தன் நண்பர்களே மந்திரியாதி மற்ற படைத்தலைவர்கள், தான் இட்டதே சட்டம் என மனப்பால் குடித்து நல்லோர் பெரியாரையும், நற்குலவனிதார்த்தினங்களையும் ஏழை எளியாரையும் அவமதித்தும், அவமானப்படுத்தியும் பிறர் நகைக்க கேலிசெய்தும் இம்சை புரிந்து வருவதாலும்;

சில செல்வச்செருக்குற்றவர்கள் ஏழைகளும் அவசரக்காரர்களும், தங்கள் அவசியத்தையும் முக்கியத்தையும் கருதி சிறிது தொகை கடனாக வாங்கவேண்டிவந்தால் அதே தக்கசமயமென்று அவர்களுடைய சொத்துக்களை ஈடு, போக்கியம் முதலியவற்றால் கட்டுப்படுத்தி, மற்ற எவ்விதத்திலும் அந்த சொத்துக்களைப் பிறர் கையாளாவண்ணமும், சொத்துக் குடையாரும் அவற்றின் மேல் வேறு கடன் முதலியவை எவ்விதத்திலும் வேறு யாரிடமும் வாங்க முடியாமலும் அவ்வளவு யோசனையோடு தஸ்தாவேஜிகள் எழுதிக்கொண்டும் அப்படி எழுதிக்கொண்ட நாள்முதல் அச்சொத்துக்கள் தன்னதாகவே பாவித்து நிச்சயப்படுத்திவிட்டு, பின்னும் சிறிதுசிறிதாக பலதடவைகளில் கொஞ்சம் தொகையை வீட்டு சிலவிற்கென்றும், வீட்டாரைச் சேர்ந்தோர்க்கென்றும், விசேஷ அலுவலுக்கென்றும் கொடுத்து வந்து தன் உத்தேசம் எவ்வளவு முடிவோ அதுவரை எதிர் பார்த்து, வாங்கிய கடன் தொகைக்கு வட்டியும், வட்டிக்குக் குட்டியும் போட்டு கணக்காக்கிவிட்டு இனி தாமதிக்கமுடியாது கடனைப் பைசல் செய்யவேண்டுமென முதலில் நயமாகவும், பிறகு கடுமையாகவும் அடுத்தடுத்து ஆள்களைவிட்டுக் கேட்டு நிர்ப்பந்தப்படுத்தியும் (நோயாளியைத் தொத்துவியாதிகள் மேலிட்டு அன்னாகாரத்தை யொடுக்கி ஜீரணசக்தியைக் குறைத்து மலஜலத்தைக்கட்டி சுவாசத்தைத் திக்குமுக்கலாடச் செய்யும்

கடூர நேரத்தில் ரோகியின் நிலை எப்படியிருக்குமோ அப்படி) இப்போதே கொடுக்காவிட்டால் நீதிஸ்தலத்தில் வழக்கு தொடுத்து எலந்திற்கு கொண்டுவருவேனென்று பயமுறுத்திக் கஷ்டப்படுத்தினுல் அக்கால் அக்கடனாளி :—

“ விடங்கொண்ட மீனைப்போலும் வெங்கனல் மெழுகைப்போலும்
படங்கொண்ட அரவின்வாயிற் பட்டதோர் தேரைபோலும்
திடங்கொண்ட ராமபாணம் செறுக்கியே செல்லும்போது
கடன்கொண்டார் நெஞ்சம்போல கலங்கினுன் இலங்கை வேந்தன்.”

என்றபடி செய்வகையறியாது கலங்கி நிற்கையில் அச்சொத்தத்தனையுந்தானே ஈன கிரயத்திற்கு விலைப்படுத்திக்கொள்வதும் ; அல்லது மேற்படி நிலையில் தாவா செய்து அதன் பூ[illegible]ம் ஸ்வாதீனப் படுத்திக்கொள்வதும் ; இவ்விருவகையாலும் ஆ[illegible]பாகிலும் மீறவிடுவது சில சமயம் பெரிய தர்மமென்று நினைத்து பலர் சிபார்சின் மீதுவிட்டொழித்து விலக்குவதும் ; சில ஈரமற்ற நெஞ்சத்தார் இதுவும் போராதென இவ்வளவு சொத்தும் முன்னைய அசலுக்கும் வட்டிக்குமே ஒருவாறு சரிப்படுத்திக்கொண்டாலும், உன் சில்லரைப் பாக்கிகளுக்கு என்ன வழி யென்று அரிச்சந்திரனை நக்ஷத்திரேசன் வருத்தியதுபோல் பின்னும் ஆளைத் தொடர்ந்தும் தனியாக தஸ்தாவேஜிகள் எழுதியும் புத்திர பௌத்திர பாரம்பரியமாய் ஆளடிமைப்படுத்தியும், வருவதாலும் ;

மிக்கார், தக்கார், மானி, வீரன், தீரன், வல்லான், வரியன், அகதி, அறிஞன் முதலிய பலரும் தங்கள் சகல யோக்கியதைகளும் மாறி “ மான மழிந்தபின் உயிர் வாழாமை முன்னினதே ”, “ கொடிது கொடிது வறுமை கொடிது ” “ பொருளிலார்க்கிவ்வுலகமில்லை ”, “ தோன்றிற் புகழொடு தோன்றுக ”, என்பவாதி பலநூறு நீதிகளையுன்னி மனமிடைந்து கவலைப்படுவோர் எத்தனைப் பெயர் ? கவலை காரணமாய் மண்ணுலகாசையை விடுப்போர் எத்தனை உத்தமர் ? இக்காரணங்களால் அலைந்துபடும் குடும்பங்களெத்தனை ? “ பதியிழந்தனம் பாலனை யிழந்தனம் ” என்றவாறு அந்தோ ! கடன் வாங்கிய கொடுமையால் கணவன் பிரிய, பாலன் கரைய, நாம் குற்றேவல்செய்ய நேர்ந்ததே ! யென வருந்தி



மான பரியாது ஈனத்தொழில் (கூலிவேலை) புரியும் கொம்பனையார் எத்தனை பெயர் ! இதற்கும் மனந்துணியாது இகலோகத்தை வெறுத்து பரலோகம் புகும் பாவையரெத்தனை ! இவ்வாறுக் கூறிச்செல்லின் வியாஸம் நீண்டுவிடும்.

இத்தகை நிலைகளில் கடன்கொடுத்தார், கடன்கொண்டாரை ஜாதி, குலம், மேன்மை, அந்தஸ்து, பிறப்புரிமை, குணவிசேஷம், பூர்வ குடும்ப விருத்தி, முன்னோர்களின் பெருவாழ்வு முதலியயாதொன்றையுமே ஒரு சிறிதுங் கவனியாது “ சிறியரே மதிக்குமிச்செல்வம் வந்துற்றபோது ” கண்மண் தெரியாது அவமதித்து கண்ட[illegible]ரெதிரில் தனது திரவிய பெருமை விளங்க வாய்க்கு வந்தவாறு [illegible]ாறி வழிந்து மனம் நோகப் பேசுவதாலும் ;

இப்படிப் பேசும்போதும், அடாதனம் செய்யும்போதும் தனக்கு சந்தோஷமாய் காண்பித்தபோதிலும் இவையத்தனையும் சிறிது சிறிதாய் விருத்தியாகி, முடிவில் அணுவே மலையானதுபோல் பொல்லாத சாபவசத்திற்காளாக்கி, பலவித கன்ம ரோகங்களுக்கு இருப்பிடமாய் கண்டாரும் நினைத்தாரும் கன்மசண்டாளனென தூஷிக்கவும், தன் நெஞ்சே தன்னைச் சுடவும், முன் செய்தவற்றை எண்ணி யெண்ணி மனம் புண்ணுகவும், செந்நாம் புலவர் வாய்வந்த அரச்சொல்லால் அழிவுறும் தேகம்போலவும் புகழ்போலவும் ஒன்றன் பின் ஒன்ருய் பலவியாதிகள்பற்றி தொந்தரை விளைத்து நரக வேதனையை யுண்டாக்குமென்பது சாஸ்திர சம்மதம்.

மானிடரின், கன்ம ரோகங்களையும் ஜென்ம ரோகங்களையும் நீக்கி சுக வாழ்வை யளிப்பதற்காகவே கருணையுடன் லட்சோப லட்சமாய் வைத்திய சாஸ்திரங்களையும், கன்ம சாந்திகளையும் நவக்கிரகமாதி தேவதா பூஜையும் அருளிச் செய்துள்ள தன்வந்திரியாதி மகான்கள் ஒரு நோய்க்கு பலசிகித்ஸைகளை அருளியுள்ளார்களென்பது பிரசித்தம். அப்படி மனித தேகத்தைக் காப்பதற்காகவே வாசியாதியோகங்களையும் அஷ்டமாதி சித்திகளையும் துறைகோடி தொந்தங்கோடியாய் கடல் மடை திறைந்தாப்போல் கூறி

வைத்துள்ளாரென்பதும், அவற்றின் அருமையும், கைவல்யமும் அனுபவசாலிகட்கே உள்ளங்கை நெல்லிக்கனியென நன்கு விளங்கும்.

(தொடரும்) கற்பகம்.

---

# தேசியக் கல்வி.

## 1. ஆரம்பப் பள்ளிக்கூடம்.

உங்களுடைய கிராமத்தில் ஒரு பாடசாலை ஏற்படுத்துங்கள். அல்லது பெரிய கிராமமாக இருந்தால், இரண்டு, மூன்று வீதிகளுக்கொரு பள்ளிக்கூடம் வீதமாக எத்தனை பள்ளிக்கூடங்கள் ஸாத்யமோ அத்தனை ஸ்தாபனம் செய்யுங்கள். ஆரம்பத்தில் மூன்று உபாத்தியாயர்களை வைத்துக்கொண்டு ஆரம்பித்தால் போதும். இவர்களுக்குச் சம்பளம் தலைக்கு மாதம் ஒன்றுக்கு 20-ரூபாய்க்குக் குறையாமல் ஏற்படுத்த வேண்டும் இந்த உபாத்தியாயர்கள் பி. ஏ. எம். ஏ. பட்டதாரிகளாக இருக்க வேண்டிய அவசியமில்லை. மெட்றிகுலேஷன் பரீக்ஷை தேறினவர்களாக இருந்தால் போதும். மெட்றிகுலேஷன் பரீக்ஷைக்குப்போய்த் தவறினவர்கள் கிடைத்தால் மிகவும் நல்லது. அந்த உபாத்தியாயர்களுக்கு தேசபாஷையில் நல்ல ஞானம் இருக்கவேண்டும். திருஷ்டாந்தமாக, இங்ஙனம் தமிழ் நாட்டில் ஏற்படும் தேசீயப் பாடசாலைகளில் உபாத்தியாயராக வருவோர் திருக்குறள், நாலடியார் முதலிய நூல்களிலாவது தகுந்த பழக்கமுடையவர்களாக இருக்கவேண்டும். சிறந்த ஸ்வதேசாபிமானமும், ஸ்வதர்மாபிமானமும், எல்லா ஜீவர்களிடத்திலும் கருணையும் உடைய உபாத்தியாயர்களைத் தெரிந்தெடுத்தல் நன்று. அங்ஙனம் தேசபக்தி முதலிய உயர்ந்த குணங்கள் ஏற்கனவே சமைந்திராத உபாத்தியாயர்கள் கிடைத்தபோதிலும், பாடசாலை ஏற்படுத்தும் தலைவர்கள் அந்த உபாத்தியாயர்களுக்கு அந்த குணங்களைப் புகட்டுவதற்குரிய ஏற்பாடுகள் செய்யவேண்டும். ஆரோக்யமும் திடசரீரமுமுடைய உபாத்தியாயர்களைத் தெரிந்தெடுப்பது நன்று.

## 2. பாடங்கள்.

(அ) எழுத்து, படிப்பு, கணக்கு.

(ஆ) இலேசான சரித்திரப் பாடங்கள்; வேதகால சரித்திரம்; புராணகால சரித்திரங்கள்; பௌத்தகாலத்துச் சரித்திரம்; ராஜபுதானத்தின் சரித்திரம்; இவை மிகவும் சிரத்தையுடன் கற்பிக்கப்படவேண்டும். பள்ளிக்கூடம் ஏற்படுத்தப்போகிற கிராமம், அல்லது பட்டணம் எந்த மாகாணத்தில் அல்லது எந்த ராஷ்ட்ரத்தில் இருக்கிறதோ, அந்த மாகாணத்தின் சரித்திரம் விசேஷமாகப் பயிற்றுவிக்கப்படவேண்டும். இங்கு நான் மகாணம் அல்லது ராஷ்ட்ரம் என வகுத்திருப்பது சென்னை மாகாணம், பம்பாய் மாகாணம் முதலிய தற்காலப் பகுதிகளைக்குறிப்பதன்று; பாஷைப் பிரிவுகளுக்கிசைந்தவாறு வகுக்கப்படும் தமிழ் நாடு, தெலுங்கு நாடு, மலையாள நாடு முதலிய இயற்கைப் பகுதிகளைக் குறிப்பது.



இந்தச் சரித்திரங்களில் மகா கீர்த்திபெற்று விளங்கும் பருவங்களை உபாத்தியாயர்கள் மிகவும் உத்ஸாகத்துடனும், ஆவேசத்துடனும், பக்தி, சிரத்தைகளுடனும் கற்பிக்கும்படி ஏற்பாடு செய்யவேண்டும்.

[குறிப்பு:—அதிபால்யப் பிராயத்தில் மனதில் பதிப்பிக்கப்படும் சித்திரங்கள் எக்காலமும் நீடித்து நிற்கும் இயல்புடையனவாம். ஆதலால் பள்ளிப் பிள்ளைகளுக்கு ஆரம்ப வகுப்புகளிலேயே நம்முடைய புராதன சரித்திரத்தின் அற்புதமான பகுதிகளையூட்டி, அசோகன், விக்கிரமாதத்தியன், ராமன், லக்ஷ்மணன், தர்மபுத்திரன், அர்ஜுனன் இவர்களிடமிருந்த சிறந்த குணங்களையும் அவற்றால் அவர்களுக்கும் அவர்களுடைய குடிகளுக்கும் ஏற்பட்ட மஹிமைகளையும் பிள்ளைகளின் மனதில் பதியும்படி செய்வது அந்த பிள்ளைகளின் இயல்பைச் சீர்திருத்தி மேன்மை படுத்துவதற்கு நல்ல சாதனமாகும்.]

தேச பாஷைகளின் மூலமாகவே, இந்தச் சரித்திரப் படிப்புமட்டுமேயன்றி மற்றெல்லாப்பாடங்களும் கற்பிக்கப்படவேண்டுமென்பது சொல்லாமலே விளங்கும். தேச பாஷையின் மூலமாகப் பயிற்றப்படாத கல்விக்கு தேசீய கல்வி யென்ற பெயர் சொல்லுதல் சிறிதளவும் பொருந்தாது போய்விடுமன்றோ? இது நிற்க, ஹிந்து தேச சரித்திரம் மாத்திரமேயல்லாது சௌகர்யப்பட்டால், இயன்றவரை அராபிய, பார்ஸீக, ஐரிஷ், போலிஷ், ருஷிய, எகிப்திய, இங்கிலீஷ், ப்ரெஞ்ச், அமெரிக்க, இத்தாலிய, கிரேக்க, ஜப்பானிய துருக்கி தேசங்கள் முதலியவற்றின் சரித்திரங்களிலும் சில முக்கியமான கதைகளும் திருஷ்டாந்தங்களும் பயிற்றிக்கொடுக்க ஏற்பாடு செய்தால் நல்லது.

ஆரம்ப பூகோளமும், அண்ட சாஸ்திரமும், ஜகத்தைப்பற்றியும் ஸூர்ய மண்டலத்தைப்பற்றியும், அதைச் சூழ்ந்தோடும் கிரகங்களைப்பற்றியும், நக்ஷத்திரங்களைப்பற்றியும் இவற்றின் சலனங்களைப் பற்றியும், பிள்ளைகளுக்கு இயன்றவரை தக்கஞானம் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும்.

பூமிப்படங்கள், கோளங்கள், வர்ணப் படங்கள் முதலிய கருவிகளை ஏராள மாக உபயோகப்படுத்தவேண்டும். ஐந்து கண்டங்கள், அவற்றிலுள்ள முக்கிய தேசங்கள், அந்த தேசங்களின் ஜனத்தொகை, மதம், ராஜ்யநிலை, வியாபாரப்பயிற்சி, முக்கியமான விளைபொருள்கள், முக்கியமான கைத் தொழில்கள் இவற்றைக் குறித்துப் பிள்ளைகளுக்குத் தெளிந்த ஞானம் ஏற்படுத்த வேண்டும். முக்கியமான துறைமுகப்பட்டணங்களைப் பற்றி யும் அவற்றில் நடைபெறும் வியாபாரங்களைக்குறித்தும் தெளிந்த விவரங் கள் தெரியவேண்டும். மேலும் இந்தியர்களாகிய நம்மவர் வெளித் தேசங் களில் எங்கெங்கே அதிகமாகச் சென்று குடியேறி யிருக்கிறார்களென்ற விஷயம் பிள்ளைகளுக்குத் தெரிவதுடன் அங்கு நம்மவர் படிப்பு தொழில் அந்தஸ்து முதலிய அம்சங்களில் எந்த நிலையிலே யிருக்கிறார்களென்பதும் தெளிவாகத் தெரியவேண்டும். மேலும் உலகத்திலுள்ள பல தேசங்களின் நாகரீக வளர்ச்சியைக் குறித்துப் பிள்ளைகள் தக்க ஞானம் பெ[illegible]ண்டும்.

(2) பாரத பூமி சாஸ்திரம் இந்தியாவிலுள்ள மாகாணங்கள் அவற் றுள் அங்குள்ள தேசபாஷைகளின் வேற்றுமைக்குத் தகுந்தபடி இயற்கை யைத்தழுவி ஏற்படுத்தக் கூடிய பகுதிகள்:—இவை விசேஷ சிரத்தை யுடன் கற்பிக்கப்பட வேண்டும். வெளி மாகாணங்களைக் குறித்துப் பின் வரும் அம்சங்களில் இயன்றவரை விஸ்தாரமான ஞான முண்டாக்க வேண்டும்.

சி. சுப்பரமணியபாரதி

(சுதேசமித்திரன்)

(தொடரும்)

---

# வெளியூர் செய்திகள்

## தர்மபுரி.

சென்ற ஜூன் மாதம் 25 ம் தேதி வெள்ளிக்கிழமை தர்மபுரி வைக் கீலும் தாலூகா போர்டு மெம்பருமான ஸ்ரீமான் வெங்கட்ராம சர்மா அவர் கள் அக்கிராசனம் வகிக்க ராஜேந்திரம் மிராசுதாரும், மாஜி திருச்சி ஜில்லா போர்டு மெம்பருமான வி. ரெங்கஸ்வாமி தாதாசாரியார் "ஸ்தல சுய ஆட்சி" விஷயமாய் சுமார் இரண்டு மணி நேரம் நீண்டதோர் உபந் நியாசம் புரிந்தார்.

அக்கிராசனர் தம்முடைய முகவுரை பிரசங்கத்தில் ஸ்தல ஸ்வய



ஆட்சி சம்பந்தப்பட்டவை புதிய சீர்திருத்தச் சட்டம் எம்மாதிரி நடை பெற வேண்டுமென்றும் விரிவாய் எடுத்துரைத்து ஸபைக்கு தாதாசாரி யார் அவர்களை அறிமுகம் செய்வித்தார்.

உபந்நியாஸத்தின ஸாராம்சம்:—

புதிய சீர்திருத்தச்சட்டப்படி ஜன நாயக ஆட்சிக்கு வஸதிகள் அதிக மாக வழங்கப்படாவிடினும், சற்றேறக்குறைய சட்ட சபையில் உத்தி யோகப் பற்றற்ற அங்கத்தினர்கள் ஜாஸ்தியாய் இருக்கும்படி ஏற்பாடா யிருக்கிறது. நமது காங்கிரஸ் கோறிக்கைகள் என்னவெனில் சுருக்கிச் சொல்லுமிடத்து மெஜாரட்டியாக உத்தியோகப்பற்றல்லாத அங்கத்தினர் கள் இருக்க வேண்டுமென்றும், கவர்னர் நிர்வாக ஸபையின் மேல் சட்ட ஸபைக்[illegible]திகாரம் இருக்கவேண்டுமென்றும், சட்ட சபைக்கு வரவு செலவு அதிகாரம் கொடுக்க வேண்டுமென்பதும்தான் இதே அம்சங் களைத்தான் உயர்தர சட்டசபை பத்தொன்பது அங்கத்தினர்களும் வற் புறுத்தியிருந்தார்கள். ஆனால் இப்பொழுது சட்ட சபைக்கு உத்தியோகப் பற்றல்லாத அங்கத்தவர்களின் சங்கியை மட்டும் ஜாஸ்தி படுத்தி யிருக் கின்றனர். கொடுத்திருக்கிற சுதந்திரத்தை சரியாய் உபயோகப்படுத்து வது ஓட்டர்களை பொருத்திருக்கிறது. சுதந்தரத்தை துர்விநியோகப் படுத் தாமல், பொது ஜனங்கள் தம் தம் கடமைகளை நன்றாய் உணர்ந்து இருக் கின்றனர் என்று அதிகாரிகள் தாமே தெரிந்து கொள்ளவேண்டும்.

அதற்கு கீழ்படியாக முனிசிபாலிட்டி, ஜில்லா, தாலூகா போர்டுகள், யூனியன் பஞ்சாயத்துக்கள், கிராம பஞ்சாயத்துக்கள் போன்ற ஸ்தல ஸுவய ஆட்சி ஸபைகளிலும் ஏற்கனவே வகித்து வந்த அதிகாரத்துடன் இப்பொழுது சற்று விரிவான சுதந்தரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இப்பொழுது ஜில்லா தாலூகா போர்டுகளில் கலெக்டர்களுக்குப் பதிலாக உத்தியோகப் பற்றற்றவர்களை நியமித்துக்கொண்டு வருவதற்கு கவர்மெண் டிற்கு நன்றி பாராட்ட கடமை பட்டிருக்கின்றோம். ஆனால் அதிகாரிகள் பொது ஜனங்களையும் தலைவர்களையும் கலந்துகொண்டு, பொது ஜன அபி மானத்தையும், நம்பிக்கையும் கொண்டவர்களையே நியமிப்பார்களானால், நிர்வாகத்திற்கு ஜனங்கள் ஜவாப்தாரியாய் இருப்பதுடன், பதவியை வகிப் பவர்களும் பொது ஜன ஸம்மதத்திற்கு கட்டுப்பட்டு நடக்க ஹேது ஏற் படும். அம்மாதிரி செய்யாவிட்டால், நிர்வாக ஊழல்கள் ஏற்படின் கவர்ன் மெண்டார் நம்மவர்களையே குறை கூறுவார்கள் என்பதில் சிறிதும் ஐய மில்லை.

கிராம பஞ்சாயத்து:—

கிராம பஞ்சாயத்து விஷயமாய் சட்ட சபைகளிலும், மாகாண, ஜில்லா நாடுகளிலும் வெகு வருஷங்களாக வற்புறுத்தி வந்தும், இப்பொழுது தான் அரை குறையாக ஒரு மசோதா தயாரிக்கப்பட்டு வெளிவந்திருக்கிறது. மசோதாவில் சிறிதளவு ஏற்பட்ட நன்மைகளைத் தவிர, கிராம அதிகாரிகள் பஞ்சாயத்தில் சாஸ்வத மெம்பர்களாக கண்டிருக்கிறது சரியான முறையல்ல. அவர்களை நியமித்துக்கொள்வது பொது ஜனங்களின் பொறுப்பாய் இருக்கவேண்டும். ஏனெனில், சில கிராமங்களில் கட்சி, பிரதி கட்சிகள் உண்டு பண்ணிக்கொண்டும், அனாவசியமான வியவகாரங்களைக் கிளப்பிக் கொண்டும், கிராம முன்னேற்றத்தை நாடாமல் இருப்பதினால் அந்த உரிமை பொது ஜனங்களுக்கு வேண்டியது முற்றிலும் அவசியம். மேலும், ஸிவில், கிரிமினல் வியவகாரங்களை பைசல் செய்ய அதிகாரம் கொடுபடாமலிருக்கிறது விசனிக்கத்தக்க விஷயம். ஸ்தல சுய ஆட்சிக்கே அடிப்படையான இப்பஞ்சாயத்து முறை அனுஷ்டிக்க இப்பொழுதாவது முன் வந்தது சற்று திருப்திகரமாயினும் ஜனங்கள் எதிர் பார்த்த படி மசோதா தயாரிக்கப்படவில்லை. அநேக கிராமங்களை ஒன்று சேர்த்து பெஞ்ச் கோர்ட் ஏற்படுத்தி கிரிமனல் விவகாரங்களை மட்டும் பைசல் செய்ய அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இப்பொழுது அனுஷ்டானத்தில் இருந்து வருகிற ரூ. 20 வரையிலுமுள்ள ஸிவில் தகரார்களை பைசல் செய்யலாம் என்ற அதிகாரம் மாற்றப்படாமல் புதிய மசோதாவிலும் கொடுபட்டிருக்கிறது. உண்மையைக் கூறுமிடத்து இது சம்பந்தமான சொற்ப வியாஜ்யங்கூட ஜில்லா முனிசிப் கோர்ட்டிற்கு போகும் காரணம் என்னவெனில், ஜனங்களுக்கு சொற்ப சம்பளம் வாங்கும் கிராம அதிகாரிகள் செய்யும் தீர்மானங்களில் நம்பிக்கை சிறிதும் இல்லை. ஜில்லா முனிசிப் கோர்ட்டுகளில் நடக்கும் ஆடம்பரங்களும், தோரணைகளும் சாட்சிகளின் பான்மையும், டியன் முதலிய தமாஷ்களும் இங்கு கிடையாது. வக்கீல்களும் கிராம முனிசிப் கோர்ட்டுகளுக்கு வருகிறதில்லை. அப்பீல் முதலியன செய்கிறதும் அங்கே இருக்கிற காரணம் பற்றி ஹைகோர்ட்டு வரையில் ஒருகை பார்த்து விடலாம் என்கிற அவா உதித்து விடுகின்றது. ஆகையினால் கவர்ன்மெண்டார் கால நீதிக்கு ஒத்தவாறு கிராம அதிகாரிகளிடத்திலும், பஞ்சாயத்து ஸபைகளிடத்திலும் பொது ஜனங்களுக்கு ஊக்கமுண்டாகச் செய்யவேணும்.

நீர்பாசன விஷயமாயும், விவசாய விருத்திக்கும் கிராம பஞ்சாயத்துகள் கவனத்தைச் செலுத்தலாம். ஜலத்தட்டு நேரிட்டால் அக்கரை எடுத்



துக்கொண்டு அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தி சீக்கிரம் வேண்டிய ஏற்பாடுகள் செய்து வந்தால் கிராமங்களுக்கு க்ஷேமமுண்டு. பட்டா மாறுதல் விஷயமாயும், தர்காஸ்து அடமானவிஷயமாயும் அதிகாரிகள் இச்சபைகளுடன் கலந்து கொண்டால் நலமுண்டு. கிராமக் கல்வி விஷயமாயும் ஊக்கம் காட்ட வேணும். ஒவ்வொரு கிராமங்களிலும் பள்ளிக்கூடங்கள் ஏற்பட்டு கல்வி பரவச்செய்வதினால் உண்டாகும் நன்மைகள் பல உள. கட்டாயப் படிப்பு விஷயமாய் ராஜப்பிரதிநிதி சட்ட சபையில் தேசபக்தரான காலஞ்சென்ற கனம் கோகலே கொண்டு வந்த மசோதா தோற்றடிக்கப்பட்டது ஸகலருக்கும் தெரிந்த விஷயம். அம்மசோதாவின் கொள்கைகளைப்பின்பற்றி, தெய்வ பக்தி, மாதா பிதா பக்தி, ராஜபக்தி, தேச பக்தி, முதலானதுகள் சரியாக உண்டாகும்படியான நம் நாட்டிற்கு உரிய கல்வி ஒவ்வொரு கிராமத்திலும் போதிக்கப்படுதல் வேண்டும். ஐக்கிய நாணயச் சங்கங்கள் நன்கு நடை பெறுகின்ற கிராமங்களில் அவைகளின் லாபத்திலிருந்து சற்று திரவிய ஸகாயம் செய்து, பள்ளிக்கூடத்திற்கு வேண்டிய சாமான்கள் முதலியன வாங்குவதற்கு உதவி புரியலாம். போலீஸ் விஷயமாக கிராமத்தார்கள் போலீஸ் அதிகாரிகளுடன் ஒத்து உழைக்கிறதில்லை இது விஷயத்திலும் இச்சபைகள் சற்று ஊக்கம் காட்டி துஷ்ட நிக்ரஹ சிஷ்ட பரிபாலனத்திற்கு ஜவாப்தாரியாயிருக்க வேண்டுமென்றும், முடிவில் நம்முடைய தாய் நாடாகிய இந்தியா எல்லாத்துறைகளிலும் முன்னேற்ற மடைய வேண்டு மென்றும் நாம் ஜந நாயக ஆட்சிக்குத் தகுதி உள்ளவர்கள் என்று நிரூபணம் செய்வது இந்த ஸ்தல ஸுய ஆட்சி ஸபைகளை வெகு ஊக்கத்துடனும், சிரத்தையுடன் நடத்துவதால்தான். ஆகையால் எல்லாப்பொறுப்பும் ஓட்டர்களையே சார்ந்திருக்கின்றது என்றுகூறி தமதுஆசனத்தில் அமர்ந்தார்.

அக்ராசனர் முடிவுரை பிரசங்கத்துடன் மகாநாடு இனிது முடிந்தது.

---

“பெண்ணிற்பெருந் தக்கயாவுள கற்பென்னுந்
திண்மை உண்டாகப்பெறின்.”

“தெய்வந்தொழாஅள் கொழுநற்றொழு தொழுவாள்
பெய்யெனப் பெய்யுமழை.”

—திருவள்ளுவர்.

---

## திருச்சி, தஞ்சை ஜில்லாக்களின்

### தொகுதிகளுக்காக

# சட்ட சபை அபேக்ஷகர்கள்.

---

### உயர்தர சட்ட ஸபை மிராசுதாரர்கள் தொகுதி.

1. வி. பி. மாதவ ராவ் அவர்கள்.
2. பி. எஸ். சிவஸ்வாமி அய்யர் அவர்கள்.

### மாகாண சட்ட ஸபை நாட்டுப்புறத் தொகுதி.

1. என். டி. லெக்ஷ்மிநாராயண அய்யர் அவர்கள்.
2. வி. ரெங்கஸ்வாமி தாதாசாரியலு அவர்கள்.
3. டி. நடராஜ பிள்ளை அவர்கள்.
4. எஸ். வீரபத்தர பிள்ளை அவர்கள்.

### மகம்மதீயர் தொகுதி.

1. பி. கலிபுல்லா ஸாஹிப் அவர்கள்.

### திருச்சி, ஸ்ரீரங்கம் நகரத்தொகுதி.

1. எ. வி. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் அவர்கள்.

### ஜமீந்தார் தொகுதி.

ஸ்ரீரங்கம் வாஸியும், ராஜப் பிரதிநிதி சட்ட ஸபையில் ஜமீந்தார் தொகுதிக்காக பிரதிநிதியாயிருக்கும் கனம் கே. வி. ரெங்கஸ்வாமி அய்யங்கார் அவர்கள் புதிய சீர்திருத்த சட்டப்படி அமையும் ராஜாங்க ஸபைக்கு (Council of State) மகம்மதியர் அல்லாத பகுதிக்கு ஒரு அபேக்ஷகராய் நிற்கின்றார்.

---



ஸ்ரீரேங்கம்:—இவ்விடத்தில் பொது ஜனங்களுக்கு உபயோகமானதும் கற்றுக்கொள்ளக்கூடிய விசேஷ ஸ்தாபனங்கள் அதிகமாயில்லை. பொதுஜன ஸேவையில் ஈடுபட்ட இரண்டு முக்கிய புருஷர்கள் இந்த நகரில் இல்லை. ஆனால் அவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட தர்ம பத்திரிகைசாலை நடை பெற்று வருகிறது. இதற்கு தலைமையான "பாரதீய ஸ்ரீவைஷ்ணவஸபை" நிர்வாஹிகள், மதாபிமானிகள் இவர்களின் ஊக்கக்குறைவால் நன்கு நடத்தப்படவில்லை. இது விஷயங்களில் பொது ஜனங்கள் ஜாஸ்தி சிரத்தை எடுத்துக் கொள்வார்களென்று நம்பப்படுகிறது.

மூன்றாவது திராவிட ஆயுர்வேத மாகாண மகாநாடு வரவேற்பு கமிட்டியார் போன மாதம் ஸ்ரீரங்கம் டௌன்ஹாலில் மீட்டிங்கு கூடினார்கள். அதில் பட்டணம் ஆயுர்வேத மகா நாட்டின் காரியதரிசியின் ஒருவழிப்பட்ட அபிப்பிராயங்கள் தெரியப்படுத்தப்பட்டன. அப்படி இருப்பதை தெரிந்த இந்த வரவேற்பு கமிட்டியார் சில தீர்மானங்கள் செய்து அதை பட்டணம் அதிகாரிகளுக்கு தெரியப்படுத்த, அவர்கள் அதை தூஷித்தும், அதைக் குறித்தும் அந்த விஷயமாயும் இம்மாதம் 27௳ பட்டணத்தில் மீட்டிங்கு கூடவும் எற்பாடு செய்திருக்கிறதாக தெரியவருகிறது. இந்த ஜில்லா வரவேற்பு கமிட்டியார் அந்த தேதியில் அவர்களுக்கு தங்கள் ஒழுங்கான, சட்டபடியுள்ள மீட்டிங்கு கூடி செய்த, தீர்மானத்தை நன்கு எடுத்துக் காட்டி அவர்கள் செய்த பிசகை உணரச் செய்வார்களென்று நம்புகிறோம்.

நிற்க, தேவாலயமே இடமாகக் கொண்ட இந்த புண்ணிய பூமியில் முனிசிபல் கவுன்சிலர் ஸ்தானத்திற்கு ஒரு பஞ்சமரை மாகாண கவர்ண்மெண்டார் நியமித்திருப்பதாயும் அதை இதர கவுன்சிலர்கள் அவர் ஒரு முனிசிபல் ஸிப்பந்தியானதால் ஏற்றுக் கொள்ள கூடாமையை எல்லோரும் சேர்ந்து ஒரே தீர்மானமாக செய்து அதை மாகாண கவர்ண்மெண்டாருக்கு அனுப்பியிருப்பதாகவும் தெரிகிறது.

மேலும் இந்த ஸ்தலத்தில் தேவஸ்தானத்தாரே முனிசிபாலிடி ஏற்படுவதற்கு முந்தியே முனிசிபாலிடியார் செய்துவரும் சகல அலுவல்களையும் செய்து வந்தார்கள் என்றும் அதை இன்னும் செவ்வனே நடத்தத்தான் அந்த காலத்து பிரபுக்கள் இனும் லாகாவாகிய இந்த ஸ்தலத்தில் ஒரு முனிசிபாலிடி ஏற்படுத்த அனுமதி கொடுக்கலாயிற்று என்னும் விஷயத்தை மாகாண கவர்ன்மெண்டாருக்கு எடுத்துரைக்க கடமைப்பட்டிருக்கிறோம்.

இங்குள்ள தேவாலயத்தை குறித்து சற்று வரைவோம்:—

இது மிகவும் புராதனமாயும் முக்கிய ஆலயமாயும் இருக்கிறபடியால் சில தேவாலயங்கள் இத்துடன் சேர்க்கப்பட்டும், ஹிமோத்கிரி முதல் கன்னியாகுமரி வரையுள்ள அநேக பக்த கோடிகள், மதாசார்யர்களால் நன்கு ஸ்தாபிக்கப்பட்டும், சீர்திருத்தப்பட்டும், புகழப்பட்டுமுள்ள இந்த தேவாலயத்தை தரிசிக்க கூட்டம் கூட்டமாக வந்து கொண்டிருக்கிறார்கள்.

அப்படியுள்ள இந்த தேவாலயம் இப்பொழுது இருக்கும் தேவஸ்தானம் அதிகாரிகளின் பொறுப்புக் குறைவாலும், தெய்வ காரியங்களில் உண்மையான பக்தி சிரத்தை குறைவாலும் பூர்வ ஸ்திதிப்படி இல்லாமல் விசனிக்கக்கூடிய நிலையில் இருக்கிறது.

வெகு தூரங்களிலிருந்தும், இன்னும் பக்கங்களிலிருந்தும் வரும் ஸேவார்த்திகளின் மனத்துயரங்கள் தேவாலய அதிகாரிகள் மனதை புண்படுத்தவுமில்லை; உறைக்கவுமில்லை. அதாவது ஸேவார்த்திகள் மிக்க ஆவலோடு தங்கள் சிரமத்தையும், திரவிய நஷ்டத்தையும் பாராது இந்த ஸ்தலத்தை நாடி பரமாத்மாவை தரிசிக்கப் போகிறோம் என்ற ஆனந்தத்தோடு ஸன்னதிக்குள் போகும்போது பரிசுத்தத்தையே விளைக்க வேண்டிய இப்புண்ய பூமியில் எங்கே பார்த்தாலும் ஆபாஸமாயிருக்கிறதையும் கவனியாது உள்ளே செல்லுங்கால் சமுசாரத்தை வெறுத்து பரமபதம் தெரிந்து கொள்ள வந்த இப்பக்தர்கள் பண்டாவாலோ அல்லது ஆசிருதக் …ளா அல்லது கோயில் ஸிப்பந்திகளாலோ கைகாசுகளை பரி



கொடுத்தும் நிர்ப்பந்திக்கப்பட்டும், கேட்காத வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டும் கர்ப்பகிரஹத்தில் முழு ஸத்வகுணமூர்த்தியை தரிசிக்கப்போனால், மதத் தலைவரான நம்ராமானுசனால் சீர்திருத்தப்பட்டு எக்கோயிலிலும் காணக்கூடாத உண்மையான பரிசுத்தத்தை உண்டுபண்ணக்கூடியதும் ஸத்வகுணத்தை விளைக்கக்கூடிய இந்த ஸதலத்தின் முக்கிய தெய்வத்தினருகேயும் பக்கங்களிலும் எல்லா விடங்களிலும் ஏகாந்தம் கூட கலைந்து கெட்டதும் மனதுக்கு ருசியில்லாததுமான வார்த்தைகளையும், செய்கைகளையும், பூஜைகுறைவுகளையும் கண்டு மனங்கலங்கி நொந்து இந்த கோயிலிடத்திலும் அதின் அதிகாரிகளிடத்திலும் ஸ்தல வாஸிகளிடத்திலும் மிக்க வெறுப்புடன் திரும்பிச் செல்வதை நாம் பார்க்கவில்லையா? அவர்களுக்கும் தெரியாதா?

போகட்டும் இனிமேலாவது என்ன செய்யப்போகிறீர்கள்?

நல்லதை நினையுங்கள்! தெய்வ காரியங்களில் சிரத்தையுடனிருங்கள்! அசுத்தங்களை விலக்குங்கள்! ஸத்வகுணங்களை விளைக்கக் கூடியதை செய்யுங்கள்! யதார்த்தத்தை விளக்கிக்காட்டி அதன்படி அனுஷ்டியுங்கள்! பக்தர்கள் பணக்காரர்களாயிருந்தாலும் ஏழைகளாயிருந்தாலும் உத்தியோகஸ்தாகளாயிருந்தாலும் இல்லாவிட்டாலும் இந்த இடத்தில் கூடியவரையில் சிரமம் கொடாமல் தரிசனம் செய்துவையுங்கள்.

இங்ஙனம் ஒரு வித குறையை மட்டில் எடுத்து புகட்டினோம். இதில் பொது ஜனங்களுக்கும் அதிகாரிகளுக்கும் இதிலிருந்து உண்டாகும் சிரத்தாபக்தியையும் தெரிந்து கொண்டு பின்னும் எழுதுவோம்.

வெங்கடேசம்.

# நமது பத்திரிகை.

இந்தியர்களுடைய ராஜபக்தியையும், தேசாபிமானத்தையும், தர்மத்தையும், ஆசாரத்தையும் விருத்தி செய்தும், ஜனத்தலைவர்கள் பலரும் ஒத்து வாழவேண்டுமென்றும், பொது ஜனங்களுக்கு அரசாங்க முறையைப்பற்றியும், உலக விஷயங்களைப்பற்றியும் அறிய ஆவலுண்டாகச்செய்ய வேண்டுமென்றும், சீர்திருத்த மசோதாவின் நற்பயனுய்வழங்கப்போகும் சுய ஆட்சி ஸ்தாபனங்களில் எல்லோருக்கும் ஊக்க முண்டாக்கச் செய்ய வேண்டுமென்றும் அவாக்கொண்டு "பாரதமாதா" வென மகுடமிட்டு இப்பத்திரிகையை பிரசாரம் செய்ய முன் வந்துள்ளோம். தேசாபிமானிகளும், பொது ஜனங்களும் பத்திரிகையை ஆதரிக்க வேண்டுகிறோம்.

## குறிப்புகள்.

சென்னை மாகாண மகாநாடு :—

சென்ற ஜூன்மாதம் 21, 22, 23, 24 தேதிகளில் சென்னை மாகாண மகாநாடு திருநெல்வேலியில் கூடிற்று. பொது ஜன ஸேவை நிமித்தம் தம்முடைய பெரிய பதவியை ராஜீநாமா செய்த ஸ்ரீமான் எஸ். ஸ்ரீனிவாஸ அய்யங்கார் ஸி. ஐ. யீ. ஸபாநாயாகராக வீற்றிருந்தார். சுமார் 5000 ஜனங்கள்வரை விஜயம் செய்திருந்தனர். விசாலநோக்கமும், ஆழ்ந்த அறிவும், மாசற்ற தேசாபிமானமும் உடைய அம்மஹானின் பிரஸங்கம் தேசமுன்னேற்றத்திற்குறிய சாஸனமேயாகும். பொது ஜனங்களின் மனதைக் கவரத்தக்க அரசியல் சம்பந்தமாய் விவரித்து பேசியதுடன் கல்வி, விவசாயம், தொழிலாளர் இயக்கம் இன்னும் இதுபோன்ற விஷயங்களைப்பற்றியும் பேசி இருக்கிறது இங்கு குறிபிடத்தக்கது.

கிராம உத்தியோகஸ்தர்கள் சங்கம் நன்னிலம்:—இச்சங்கத்தின் ஆண்டு விழா தஞ்சை ஜில்லா நன்னிலத்தில் சென்ற ஜூன் 27 ம் தேதி கூடிற்று. சென்னை பிரபல வக்கீல் ஸ்ரீமான் வி. பி. ராமஸ்வாமி ஐய்யர் அவர்கள் அக்கிராசனம் வகித்தார். கனம் வி. எஸ். ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகளும் ராவ் பகதூர் கே. எஸ். வெங்கட்டராமய்யாவர்களும், மற்றும் சில பிரமுகர்களும் பிரசன்னமாயிருந்தனர். அக்கிராசனர் தம்முடைய பிரசங்கத்தில் கிராம உத்தியோகஸ்தர்களுடைய பொறுப்புகளையும், குறைகளையும் நன்கு விளக்கிக்காட்டி நமது மாகாண கவர்ன்மெண்டார்



குறைகளை நிவர்த்திக்க வேண்டுமென்றும் வற்புறுத்தினர். இப்பொழுது அனுஷ்டானத்திற்கு கொண்டுவர முயலும் கிராம பஞ்சாயத்து மசோதாவைப்பற்றியும் சிறிது நேரம் பேசினர்.; சில தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

---

நமது கலெக்டர்:—திருச்சினாப்பள்ளி ஜில்லா கலெக்டர் துரை அவர்கள் குடிகளிடத்தில் மிகுந்த பக்ஷமும் தாராள நோக்கங்களும் கொண்டவர் என்பது பிரஸித்தம். குளித்தலை தாலூகாவில் "பர்மிட்" வாங்கிக் கொள்ளாமல் இரண்டாவது போக சாகுபடி செய்ததற்காக கீழ் அதிகாரிகள் தண்டத்தீர்வை விதித்திருந்த தொகை ரூ. 8000 வரை குடிகளின் வேண்டுகோளுக்கிணங்கி கலெக்டர் ரத்து செய்து விட்டதற்காக நாம் நன்றி [illegible]ட்ட கடமைப்பட்டிருக்கிறோம்.

---

மீனாட்சி கலாசாலை, சிதம்பரம்:—நாட்டுக்கோட்டை வம்சத்தவர்க்கு சிரோ பூஷணமாய் விளங்கும் கருணை வள்ளலான மிஸ்டர் S. R. M. M. A. அண்ணாமலைச் செட்டியார் அவர்களால் உயர்தரக் கல்விசாலை ஒன்று சிதம்பரத்தில் சென்ற ஜூன்மீ 24உ ஏற்படுத்தப்பட்டது. கலாசாலையை கல்வி இலாகாத் தலைவரான லிட்டில் ஹேல்ஸ் துரை அவர்கள் திறந்து வைத்தார். ஒவ்வொரு நகரிலும் கிராமத்திலும் அம்மாதிரி கலாசாலைகளும், பள்ளிக்கூடங்களும் ஸ்தாபிக்கப்படின் தேச முன்னேற்றத்திற்கு ஹேது உண்டு.

திருச்சி நாஷனல் கலாசாலை:—திருச்சி நகரில் சென்ற ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்ட இக்கலாசாலை மிகவும் திருப்தி தரத்தக்க அலுவல் செய்திருக்கிறது என்று இண்டர்மீடியேட் பரிக்ஷையில் தேறியிருக்கிற மாணவர்களின் தொகையிலிருந்தே நன்கு விளங்குகிறது. கலாசாலையின் நிர்வாகிகளுடையவும் சிறப்பாக தலைவரான ஸ்ரீமான் கே. ராமானுஜாசாரியார் அவர்களுடையவும் ஊக்கம் போற்றத்தக்கதே.

ஸ்ரீமான் ஜி. சேஷய்யங்கார் அவர்கள்:— திருச்சி நாஷனல் உயர்தர பள்ளிக்கூடத்தை ஸ்தாபித்தவரும் சென்ற 34 வருஷங்களாக தலைமை உபாத்தியாயர் பதவியை வகித்து, தம் உடல், பொருள் ஆவி எல்லாம் அதின் நிமித்தமே அர்ப்பணம் செய்தவருமான ஸ்ரீமான் சேஷய்யங்கார் அவர்கள் இம்மாதம் 9 ம் தேதி தம்பதவியிலிருந்து விலகிக்கொண்டார். அப்பொழுது உபாத்தியாயர்களும், மாணவர்களும்,

பிரிவு உபசாரக்கொண்டாட்டம் கொண்டாடினார்கள். ஐய்யங்கார் அவர்கள் சுகஜீவியாய் இருந்து தம்முடைய வாழ்நாள் வரை கலாசாலை முன்னேற்ற விஷயமாய் பாடுபடுமாறு வேண்டுகிறோம்.

---

பொதுவாக பரீக்ஷார்த்த கிராம பஞ்சாயத்துகள் நடைபெறும் இடங்களில், ஸபை அங்கத்தவர்கள் தம் தம் பொறுப்பையும், கடமையையும் உணர்ந்து கிராமங்களின் முன்னேற்றத்திற்காக பாடு படுகின்றனர் என்று அறிகிறோம். சிற்சில இடங்களில் சில்லரை துவேஷங்களைக் கொண்டு பஞ்சாயத்து முன்னேற்றத்தையும், அதின் மூலமாய் கிராம முன்னேற்றத்தையும் கோருதவர்களும் உளர் என்று நமக்கு எட்டியிருக்கிற அறிக்கைப்பத்திரங்களிலிருந்தும், கடிதங்களிலிருந்தும் தெரிகிறது. இனி பிரதி மாதம் தோறும் அந்தந்த ஸபைகளின் பத்திரங்க[illegible]ராய்ந்து பிரசுரம் செய்ய ஏற்பாடுகள் செய்துகொண்டு வருகிறோம்.

---

மூன்றாவது தடவையாக திருச்சி ஜில்லாபோர்டு அக்கிராசனராக மாகாண கவர்ன்மெண்டார் கனம் டி. தேசிகாசாரியார் அவர்களை நியமித்ததற்கு நாம் நன்றி பாராட்டுகிறோம். ஸ்ரீமான் ஐய்யங்கார் அவர்களின் நிர்வாக முறையில் கல்வி, ரோட் மராமத்து முதலிய துறைகளில் சீர் திருத்தங்கள் அடைந்திருக்கின்றனவென அறிகிறோம்.

திருச்சிக்கும் ஸ்ரீரங்கத்திற்கும் மத்தியிலிருக்கும் காவேரிஆற்றின் பாலம் ரஸ்தா சரியான நிலைமையில் இல்லை. இப்பொழுதோ கணக்கற்ற மோட்டார் வண்டிகளும், போக்குவரவுக்குரிய சாதனங்களும், பாலம் தாங்காதவாறு நடைபெறுகின்றனவென்பது நாம் கூறாமல் விளங்கும். அய்யங்கார் அவர்கள் சற்று கவனம்செலுத்தி கூடிய சீக்கித்தில் பாலத்தை புதிப்பிக்குமாறு வேண்டுகிறோம்.

---

முதல் முதலாக திருச்சி நகர பரிபாலன ஸபைக்கு மகம்மதிய சமுகத்தினரைச்சேர்ந்த பி. கலிபுல்லாஸாஹிப் பகதூர் அக்கிராசனாதிபதியாய் தேர்ந்து எடுக்கப்பட்டிருக்கிறார். பொது ஜன சேவையில் எல்லாத் துறைகளிலும் ஊக்கம் காட்டிவரும் ஸாஹிப் பகதூர் இந்நகரபரிபாலன ஸபையை ஒருமாதிரி (Ideal) ஸபையாகச்செய்வார் என்று நம்ப இடமிருக்கிறது.



ஸ்ரீரெங்கம் நகரபரிபாலன ஸபைக்கு மறுமுறை ஸ்ரீமான் ராமானுஜ ஐய்யங்கார் அவர்கள் அக்கிராசனராக தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார். பஞ்சமவகுப்பைச்சேர்ந்த மிஸ்டர். வ. மூக்கன் என்பவர் ஒரு கவுன்சிலராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

முனிசிபல் சிப்பந்தி என்கிற முறையில் அவருடைய நியமனம் பலிக்காது என்று ஸபையார் ஒரே மனத்தினராய் கண்டித்திருக்கிறதாகத் தெரிகிறது. முடிவை ஆவலுடன் எதிர்பார்க்கின்றோம்.

---

தஞ்சாவூர் ஜில்லா போர்டு அக்கிராசனராக கும்பகோணம் வாஸியான கனம் வி. கே. ராமானுஜாசாரியார் நியமிக்கப் பட்டிருக்கிறார். ஸ்ரீமான் அய்யங்கார் அவர்களை அறியாதார் ஒருவரும் இலர். திருச்சி தஞ்சைவ[illegible]ளின் பிரதிநிதியாக (ஸ்தல சுய ஆட்சி) மாகாண சட்ட சபையில் ஸ்தானம் வகித்து வருகிறார். கும்பகோணம் நகரபரிபாலன ஸபை அக்கிராசனராகவும், பற்பல பொது ஸ்தாபனங்களிலும் ஸ்தானம் வகித்து தேசமுன்னேற்றத்திற்காக பாடுபட்டுக்கொண்டு வந்திருக்கின்றார். ஆகவே இஸ்தானத்திற்கு அவர் தகுதியுள்ளவரே என்பது பொதுஜனவாக்கு. தஞ்சாவூர் ஜில்லா போர்டின் ஆட்சி முறையைப்பற்றி மற்றொரு சமயம் விவரமாய் எழுதுவோம்.

சென்னை சட்ட சபை:—இந்த ஸபையின் கூட்டம் இம்மாதம் 13ம்தேதி முதல் 4 நாள் சென்னையில் கூடிற்று. நடந்தேறின முக்கிய அம்சங்களில் லோகல் போர்டுகள் சம்மந்தமாய் சர்க்கார்தரப்பில் ஸர் பி. ராஜகோபாலாசாரியார் ஒரு மசோதா கொண்டுவந்தார். உத்தியோகப்பற்றற்ற அங்கத்தினர்களால் நன்கு வாதிக்கப்பட்டு விஷயஆலோசனைக் கமிட்டிக்கு பரிசீலனைக்கு விடப்பட்டிருக்கிறது.

ஸ்கூல் பைனல் மாணவர்கள் மறுமுறை பரீட்சைக்கு வரும்போது (Supplimentary course) எல்லா பாடங்களிலும் ஆஜராக வேண்டுமென்ற விதியை ரத்து செய்து விடவேணும் என்று கனம் கே. வெங்கடப்பைய்யா பந்துலு அவர்கள் ஒரு தீர்மானம் கொண்டு வந்தார். 20 பேர் ஸாதகமாயும் 11 பேர் பாதகமாயும் ஓட் கொடுத்ததால் இறுதியில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது மாணவர்களின் அதிர்ஷ்டம் தான். நிற்க, நம் ஜில்லாவாஸியும் கல்வி முன்னேற்றத்

தில் ஈடுபட்டிருக்கிற கனம் தேசிகாசாரியார் அவர்கள் ஏன் பாதகமாய் ஓட் கொடுத்தாரோ என்று நமக்கு சற்றும் விளங்கவில்லை.

---

புதிய ஓட்டர்களின் கடைசி ஜாப்தா ஆகஸ்டு மாதம் மூன்ருவது வார முதலில் வெளிவருமென்றும் நவம்பர் 20ம் தேதி எலக்ஷன் நடை பெறும் என்றும் அறிகிருேம்.

---

கனம். பி. என் சர்மா:- சென்னை வாஸியும் வக்கீலுமான கனம் சர்மா அவர்கள் புதிய சீர்திருத்த சட்ட அமைப்பின்படி இந்தியா கவர்ண்மெண்டின் நிர்வாக சபை அங்கத்தினராக நியமனம் செய்யப்பட்டிருக்கிருர். சென்ற அநேக வருஷங்களாக சென்னை சட்டஸபையிலும் உயர்தர சட்ட ஸபையிலும் ஜனப் பிரதிநிதியாக அமர்ந்து தேசத் தொண்டு செய்திருக்கிருர். காலம் சென்ற கோகலே கோஷ்டியைச் சேர்ந்தவரென்றும் அம்மஹானின் அடிச்சுவடுகளையே பின்பற்றி வருகின்றனர் என்றும் தெரிகிறது. பொது ஜனங்கள் எண்ணுகிறபடி புதிய சீர்திருத்தச் சட்டத்தை போற்றி வரும் கோஷ்டியை அவர் சேர்ந்தவராதலால் தேச முன்னேற்ற ஸம்மந்தமாய் தம் ஊக்கம் குன்ருமல் பாடு படுவாரோ என்பது நம்முடைய கேள்வி. விவசாயம், நிலத்தீர்வை, முதலிய அமுலை வகிப்பாரென்று "பயோனியர்" பத்திரிகை கூறுகிறது உண்மையாயின் ஸ்ரீமான் சர்மா அவர்களால் சில நன்மைகளை எதிர் பார்க்கவும் இடமிருக்கிறது.

---

"எபிபனி பத்திரிகையின் கூற்று :-" கல்கத்தாவில் வெளிவரும் இப்பத்திரிகையில் ஹிந்துவிதவைகளில் 100க்கு 99 பேர் தம் கற்பிற்கு மாருக கெட்ட வழியில் இறங்கியிருக்கின்றனர் என்று பிரசுரம் செய்திருந்ததை கண்டித்து இம்மாதம் கல்கத்தா வக்கீலாகிய மனீந்திரநாத்குங்குளி அவர்கள் ஒரு மான நஷ்டதாவா தொடுத்திருக்கின்றனர். இந்த உண்மைக்கு மாருனதும், ஹிந்து ஜனஸமுகத்தையும் நடுக்குமுறச் செய்யும் படியான தகவல் எந்த "சென்சஸ்" ரிபோர்ட்டிலிருந்து அப்பத்திரிகை கஷ்டப்பட்டு எடுத்ததோ நாம் அறியோம். கேஸின் முடிவை நாம் ஆவலுடன் எதிர் பார்க்கிருேம்.


## இந்துஸ்தான் கோவாபரேடிவ் இன்ஷூரன்ஸ் சொஸைடி லிமிடெட்.

தலைமை ஆபீஸ்:—கல்கத்தா.

பிராஞ்சு:—6, செம்புதாஸ் தெரு, மதருஸ்.

டைரக்டர்கள்:—Mr. C. R. Das (தாஸ்).

,, சக்கரவர்த்தி, முதலியவர்கள்.

செலுத்தப்பட்டிருக்கிற மூலதனம்:—ரூ. 2,000,000.

ரிஸ்க் நிதி:—ரூ. 4,000,000.

பாலிஸிஹோல்டர்களின் சங்கியை:—24,000.

சமீபகால போனஸ் டிவிடெண்டு:—ரூ. 25.

மற்ற விவரங்களுக்கு அடியில் கண்டவருக்கு தயவு செய்து எழுதுங்கள்.

**N. S. T. CHARIAR,**
*Special Agent, Kodiyalam Post,*
*(Via) Elamanur S. I. Ry.*
**TRICHINOPOLY Dt.**

---

## ஏஜெண்டுகள் தேவை.

கல்கத்தாவிலுள்ள தேசீய தலைவர்களான C. R. Das. தாஸ் சக்கரவர்த்தி முதலியோர்களை டைரக்டர்களாகக் கொண்டுள்ள ஹிந்துஸ்தான் கோவாபரேடிவ் இன்ஷூரன்ஸ் சொஸைடிக்கு பாலிஸிஹோல்டர்கள் சேர்க்க ஏஜண்டுகள் தேவை. தகுந்த கமிஷன் கொடுக்கப்படும்.

மற்ற விவரங்களுக்கு கீழ் கையொப்ப மிட்டிருக்கிறவருக்கு எழுதவும்.

**N. S. T. CHARIAR.**
*Special Agent, Kodiyalam Post,*
*(Via) Elamanur, S. I. Ry.*
**TRICHINOPOLY Dt.**

Printed at the Catherine Printing Works, Trichinopoly, and Published by
A. R. Rajagopalan, 449, East Chitra Street, Srirangam.

Home Mis. DEPARTMENT.

'Bharatamata'

Subscription for the journal by Govt. — refused.

16

READ AGAIN G.O. No. ........., dated ......... 192

" " ......... " ......... 192

READ ALSO:—

C. No. 3673. From the Editor, Bharatamata No. 52/20, dated 26-7-1920.

" " ......... " " ......... " ......... " ......... 192

" " ......... " " ......... " ......... " ......... 192

ORDER.

Mis

No. 1281, dated 7/8 192

The Govt. are unable to subscribe to the journal "Bharatamata".

S. [initials] 5/8/20. [initials] 6/8/20

To

M.R.Ry. A.R. Rajagopala Iyengar,

Editor, 'Bharatamata'

449 East Chitra Street

Srirangam.

~~[illegible]~~

Trichinopoly Dt.

Sd.

RH 3.8.20

Sa 4.8.20

Note. The journal which is a monthly one does not seem to contain anything that is likely to interest Govt. The Editor's request may, I think, be refused.

Dspd 8/9/8/20

[initials] 3.8.20 [initials] 4.8.20

When given for copying
When copied
When examined
When signed
192

READ AGAIN G.O. No. , DATED
192 .

CURRENT No.

ENCLOSURES TO C. No.

ORDER OF GOVERNMENT .. .. .. .. A A A A A A A

LETTER OF GOVERNMENT.

STATEMENT WITH DITTO.

PAPERS NOT FILED UP, BEING MEANT FOR DESPATCH IN ORIGINAL.

N.B.—
A = Copy in full.
B = Not to be copied.
P = Copy abstract only.
Q = Copy heading only.